**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், செங்கல்பட்டு**

**OS.No.467/2007 D.W.3**

(சாட்சிக்கு திரு.V.பிரதாப், உதவியாளர் அவர்களால் சாட்சி பிரமாணம் செய்யப்பட்டது)

பெயர் டேவிட் பிரபு குமார்

த/பெ. எபினேசர் சாமுவேல்

வயது 70

வசிப்பிடம் எண்.6, அண்ணாசாலை, சென்னை

தொழில்

**முதல் விசாரணை 09.02.2026**

நான் இந்த வழக்கில் 5வது பிரதிவாதியின் முகவர் ஆவேன். இன்று இந்த வழக்கில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். 01.03.2016 தேதியிட்ட 4, 5 பிரதிவாதிகள், எனக்கு வழக்கு நடத்த எழுதிக் கொடுத்த அதிகாரம் பத்திரம் பி.சா.ஆ.7. 09.01.1940 அன்று பார்த்தசாரதி, சின்னம்மாளுக்கு எழுதிக்கொடுத்த கிரய பத்திரத்தின் சான்றிட்ட நகல் பி.சா.ஆ.8. 14.05.1948 அன்று கண்ணம்மாள், குலசேகரனுக்கு எழுதிக்கொடுத்த கிரய பத்திரத்தின் சான்றிட்ட நகல் பி.சா.ஆ.9. 24.05.1949 அன்று அம்மா கண்ணம்மாள், குலசேகரனுக்கு எழுதிக்கொடுத்த கிரய பத்திரத்தின் சான்றிட்ட நகல் பி.சா.ஆ.10. 13.12.2002 அன்று 1வது பிரதிவாதி, 4வது பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரய பத்திரத்தின் சான்றிட்ட நகல் பி.சா.ஆ.11. 1948 முதல் 2006 வரையிலான வில்லங்க சான்றிதழ் நகல் பி.சா.ஆ.12. 16.04.2002 தேதியிட்ட குலசேகரன் பெயரிலான அசல் சிட்டா பி.சா.ஆ.13. 14.04.2002 தேதியிட்ட குலசேகரன் பெயரிலான அடங்கல் பி.சா.ஆ.14. 13.12.2002 தேதியிட்ட குலசேகரன் பெயரிலான அசல் சிட்டா அடங்கல் பி.சா.ஆ.15. 09.03.2005 தேதியிட்ட சார்பதிவாளர் அலுவலகத்தில் இருந்து 4, 5 பிரதிவாதிகளுக்கு அனுப்பப்பட்ட குறைந்த முத்திரை கட்டணம் செலுத்தியதற்கு சமாதானம் செய்து கொள்ள சமாதான திட்டத்தின் கீழ் அனுப்பப்பட்ட அறிவிப்பு பி.சா.ஆ.16. 01.02.2004 தேதியிட்ட புகைப்படம் மற்றும்

குறுந்தகடு பி.சா.ஆ.17. 2004 வருடத்திய 5ம் பிரதிவாதியின் தேவாலயத்தின் பராமரிப்பு, சம்பளம் மற்றும் இதர செலவகளை காட்டும் ரசீதுகள் பி.சா.ஆ.18. (பி.சா.ஆ.13 முதல் பி.சா.ஆ.18 வரையிலான ஆவணங்கள் ஆட்சேபனைக்குட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது)

(வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)